மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: எத்தனை சதவீத வட்டிக்குக் கடன் வாங்கப்பட்டது, எத்தனை சதவீத வட்டிக்கு வங்கியில் பணம் போடப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய விவரம் இங்கே இல்லை. ஆனால் மாநகராட்சி மன்றம் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக இந்தப் பணத்தை செலவழிக்க தங்களுக்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் நீர் வழங்கும் திட்டம், கழிவு நீர்த் திட்டம் ஆகியவைகளுக்கு இதனைப் பயன் படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியது என்றாலும் மாநகராட்சி மன்றம் தாங்கள் ஏற்கனவே சொன்ன பல வருவாய்த்துறை இனங்களுக்காக அதைச் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இதைப்பற்றிப் பின்னாலே முடிவு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, கடனை வசூலிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியது. இதன்படி கடன் வசூலிக்கப் பட்டு சென்னை ரிசர்வ் வங்கியில் பணம் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக குழு ஒன்று இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு இதனைப் பரிசீலனை செய்யும்பொழுது அதனுடைய பல்வேறு அம்சங்களையும் ஒன்றாக ஆராயும். இந்தக் குழுவின் அறிக்கை வந்தவுடன் கடன் தொகை எந்தக் காரியங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றி நிர்ணயிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : எந்தப் பணிகளுக்காக இந்தக் கடன் தொகை செலவழிக்கப்பட வேண்டும் என்பது பற்றி மாநகராட்சி மன்றம் கருத்துத் தெரிவித்திருக்கிறது. அமைச்சர் அவர்களும் அதைப்பற்றிக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இப்பொழுதே 6 மாதம் ஆகிவிட்டது. அனாவசியமாகக் காலதாமதம் ஆகாமல் மறுபடியும் எப்பொழுது இதைப்பற்றி முடிவு செய்யப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பணம் வங்கியில் இருக்கிறது. வட்டி கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற குழுவினுடைய அறிக்கை கிடைப்பதற்கு காலவரை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை விரைவிலே கிடைக்கும். கிடைத்த பிறகு அதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

*215 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government proposes to set up a high power committee to suggest ways and means for augmenting the resources of Madras City Corporation; and

(*b*) if so, how soon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) : சென்னை மாநகராட்சியின் வழிவகை நிலைமை குறித்த விவரங்களை ஆய்வு செய்வதற்காக அதிகாரிகள் அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்றை 15—7—1969 அன்று அரசு நியமித்துள்ளது.

திரு. கே. விஞயகம் : இந்த அதிகாரிகளின் பெயர் என்ன? நான்-அபிஷியல்ஸ் யாராவது அந்தக் குழுவில் போடப்பட்டிருக் கிருர்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதிகாரிகள் அடங்கிய குழு என்ருல், நான்-அபிஷியல்ஸ் அதில் இல்லை என்பது தெளிவாகத் தெரிய வரும். அரசுச் செயலாளர், நிதித்துறை இந்தக் குழுவின் தலைவர். அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை—உறுப்பினர். அரசுச் செயலாளர், சுகாதாரம் —குடும்ப நலத்துறை—உறுப்பினர். தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (பொது)—உறுப்பினர். அரசுத் துணைச் செயலாளர் (உள்ளாட்சி பணியாளர்) கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை—உறுப்பினர்— செயலாளர். கிராம வளர்ச்சி இணை இயக்குநர் (கல்வி) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகம்—உறுப்பினர்.

திரு. கே. விஞயகம் : இந்தக் குழுவில் மேயர் அவர்களையும், ஸ்டாண்டிங் பிஞன்ஸ் கமிட்டி சேர்மன் அவர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு என்ன தடை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மேயர் அவர்களும், மற்றவர்களும் வந்து அரசினருடைய உதவியை நாடிஞர்கள். கார்ப்பரேஷன் நிதி நிலைமையில் ஏற்பட்ட சிக்கல்களையும், நடை முறைச் சங்கடங்களையும் தீர்த்து வைக்க தங்களுக்கு உதவி தேவை என்று கேட்டபொழுது, அந்த அடிப்படையில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழு மேயர் அவர்களையும், சென்டிரல் கமிட்டி சேர்மன், கமிஷனர், ஆகியோர் அனைவரையும் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டுக்கொள்ளும்.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

* 216 விஞ.—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட விஞக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1—1—1968 முதல் 31—12—1968 முடிய எத்தனை தீர்மானங்கள் போடப் பட்டன ?

(இ) அவற்றில், எத்தனை செய்து முடிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 403.

(இ) 390.

மேலூர் வடக்கு ஒன்றியத்திற்குப் பணிமனைக் கட்டடம்

* 217 விஞ.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடை யளிப்பாரா—

மேலூர் வடக்கு ஒன்றியத்திற்கான பணிமனைக் கட்டடத்தை (Office Building) இதுவரை கட்டாததற்குரிய காரணம் என்ன ?